சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள் 07.08.2025
வா.சா.1 – போஸ் S/o நடராஜன்
OS No.15/2022 :
(சாட்சி மனுவின் பேரில் திரும்ப வரவழைக்கப்பட்டு 1,2, மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
குறுக்கு விசாரணை :

கலைமோகன், ரகுபதி 1, 2 பிரதிவாதிகள் என் அப்பா நடராஜனின் மகன் வழிபேரன்கள். என்னுடைய அண்ணன் மகன்கள் ஆவார்கள். வழக்குரையில் கொடிவழிஜாபிதா தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான் தவறாக சொல்கிறேன் என்றும் அவ்வாறு ஒரு கொடிவழிஜாபிதா இணைத்து வழக்கை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கொடிவழிஜாபிதா தாக்கல் செய்யாமல் நான் சொன்ன விபரங்கள் அனைத்தும் உண்மையா இல்லையா என்பது தெரியாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து 79 செண்டு ஆகும். வழக்கு சொத்து சின்னையா என்ற ஆதப்பன் கிரையம் வாங்கிய சொத்தாகும். மேற்படி கிரைய பத்திரத்தை வழக்கில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். மேற்படி ஆவணம் வா.சா.ஆ.1 ஆகும். சின்னையா என்ற ஆதப்பன் என்பவருக்கு மதயானை என்ற மாணிக்கம்,ராமசாமி, நடராஜன் என் அப்பா ஆகியோர் வாரிசுகள் ஆவர். அதை நிருபிக்க வாரிசுதாரார் சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. கிரைய பத்திரத்திலேயே 3 பேரையும் மைனர்கள் என்று காட்டியிருக்கிறார்கள். பெரியமதயானை என்பவர் சின்னையா என்ற ஆதப்பன் என்பவருடைய உடன்பிறந்த சகோதரர் ஆவார். பெரியமதயானையை பற்றி என்னுடைய வழக்குரையில் தெரிவித்துள்ளேன். பெரியமதயானை இறந்த பிறகு சின்னையா என்ற ஆதப்பன் சமமாக ஒதுக்கப்பட்ட பாகத்தினை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றும் யார் யாருக்கு எவ்வளவு பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் மதயானை, ராமசாமி, நடராஜன்

ஆகியோர்களுக்கும், அவர்கள் உடன்பிறந்த சகோதரர்களான பெரியமதயானை மக்களாகிய முத்தணன், பெரியகருப்பன் ஆகியோருக்கும், வெள்ளையன் அம்பலம் மகன் பெரியகருப்பனுக்கும் வாயமொழிபாகமாக சரிபங்கு பிரித்து கொடுக்கப்பட்டுள்ளது, அதன்படி அனுபவித்தும் வருகிறார்கள். பெரியமதயானையின் மக்கள் முத்தணன், பெரியகருப்பன். அதில் முத்தணன் இறந்துவிடுகிறார். பெரியகருப்பன், துரை ராசு ஆகியோர் முத்தணனின் வாரிசுகள் ஆவர். அதற்கான வாரிசுதாரர் சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்திருக்கேிறன. அவ்வாறு வாரிசுதாரர் சான்றிதழ் எதுவும்தாக்கல் செய்யவில்லை என்றும் வழககிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பெரியகருப்பன் இறந்துவிட்டார். அவருடைய இறப்புசான்றிதழை தாக்கல்செய்யவில்லை. பெரியகருப்பனின் வாரிசுகள் 13ம் பிரதிவாதி ராஜேந்திரன், 14ம் பிரதிவாதி நேரு, 15ம் பிரதிவாதி லோகநாதன் ஆகியோர் வாரிசுகள் ஆவர். அதை காண்பிக்க வாரிசுதாரர் சான்றிதழ் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. முத்தணன் மகன் துரைராஜ் என்றும் துரைராஜின் மகன் மகாராஜா இந்த வழக்கின் 16வது பிரதிவாதி என்பதை காண்பிக்க வாரிசுதாரர் சான்றிதழ் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. பெரியகருப்பன் மகன் விவேகானந்தன், விவேகானந்தன் மனைவி இந்த வழக்கின் 17வது பிரதிவாதி கஸ்தூரி. பெரியகருப்பனுக்கும் கஸ்தூரிக்கும் என்ன சம்பந்தம் என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதர்ன. விவேகானந்தனுக்கும் வாரிசுதாரர் சான்றிதழ் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. 13 முதல் 17 பிரதிவாதிகள் அவர்களுக்கு பாகத்தில் ஒதுக்கப்பட்ட சொத்தை அனுபவித்து வருவதற்கு ஆதாரமாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 6 முதல் 18 வரையிலான பிரதிவாதிகளை இந்த வழககில் பெயரளவில் சேர்த்துள்ளேன் பரிகாரம் எதுவும் அவர்களுக்காக கோரியிருக்கிறேனா என்றால் அவர்கள்

அனுபவித்து வந்ததால் அவர்களுக்கு அறிவிப்பு கொடுத்து வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன். சின்னையா என்ற ஆதப்பன் மக்களுக்கு 39.5 செண்டு பாகத்தில் ஒதுக்கப்பட்டதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பட்டா சின்னையா என்ற ஆதப்பன் பெயரில் தான் இருந்து வந்தது. சின்னையா என்ற ஆதப்பனுக்கு எனது பிராதில் 26.3 செண்டு என்றும், ஆனால் என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் 1வது பத்தியில் 26.3 செண்டு ஒதுக்கப்பட்டதாகவும், பத்தி3ல் 39.5 செண்டு என்று அவருடைய 3 மகன்களுக்கு ஒதுக்கப்பட்டதாக முன்னுக்கு பின் முரணாக கூறியிருக்கிறேன் என்றால் கோவிலுக்கு என்று அவர் ஒரு 6 கடைகளை ஒதுக்கிவிட்டிருக்கிறார். அதனால் சேர்த்து சொல்லியிருக்கிறேன். 2 கோவில்களுக்கு கடையை ஒதுக்கிவிட்டிருக்கிறார்கள் அந்த கடை வாடகையை வாங்கி தான் கோவிலுக்கு செய்யும் வைபவங்கள் எல்லாம் செய்யப்படும். ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு வாரிசுகளுக்கு வரும்போது அவரவர்கோவிலுக்கு செய்வார்கள். மேற்படி விபரங்கள் என் வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் அதற்கான ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். டிரஸ்ட் ஒன்று அமைக்கப்பட்டு அதனடிப்படையில் தான் தர்மகாரியங்கள் செய்யப்பட்டுவந்தது என்றால் முதலில் இருந்தது அதன்பின்னிட்டு டிரஸ்ட் இல்லை. 14.12.1922 தேதியில் பெரியகருப்பன் அம்பலம், மதயானை அம்பலம் மகன் முத்தணன், சின்னையா என்ற ஆதப்பன் 1வது நபராகவும், அவருடைய மக்கள் மதயானை, ராமசாமி 2வது நபராகவும்,அவருடைய மகன் ராமசாமி 3வது நபராகவும் மதயானை மகன் முத்தணன், பெரியகருப்பன் 4வது நபராகவும், வெள்ளையன் அம்பலம் மகன் பெரியகருப்பன் 5வது நபராகவும், டிரஸ்ட் ஏற்படுத்தி இருக்கிறார்கள் என்றால் சரிதான். சாட்சியிடம் மேற்படி பத்திரம் காட்டப்பட்டு சாட்சி அதை சரிதான் என்று ஒப்புகொள்ளவே மேற்படி ஆவணம் பி.சா.ஆ.1 ஆக குறியீடு

செய்யப்படுகிறது. மேற்படி டிரஸ்டின் அடிப்படையில் மேலூர் கல்யாணசுந்தரர் கோவிலில் நடத்தும் திருவிழாவிற்காகவும், திருவாதவூர் வேதநாயகி அம்பாள் திருக்கோவிலில் நடத்தும் திருவிழாவிற்காகவும், மற்றும் பிராமணர்களுக்காக தர்மகாரியங்கள் செய்யவும், சொத்து ஒதுக்கப்ட்டிருக்கிறது என்றால் தர்மகாரியங்கள் செய்வதற்கு என்று ஆதப்பன் உயிரோடு இருக்கும் போதே கடைகளை ஒதுக்கிவிட்டு டிரஸ்டை நீக்கிவிட்டார். எந்த வருடம் மேற்படி டிரஸ்ட் உடைக்கப்பட்டது என்றால் தெரியாது, ஆனால் அவர் 1954ம் ஆண்டு சின்னையா என்ற ஆதப்பன் இறந்தார். அதற்கு முன்பே டிரஸ்ட் உடைக்கப்பட்டது. டிரஸ்ட் உடைக்கப்பட்டதற்கு ஆவணம் இருக்கிறதா என்றால் பிரித்து அவரவர் பாகத்தை அவரவர் அனுபவத்தில் இருந்ததில் இருந்தே உடைக்கப்பட்டது தெரியும்.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.08.07 20:02:48 +0530

Sub Judge

Melur